1990 ஏப்ரல் 26]

வருவதற்காக முடிவு செய்து இருக்கிறார்கள். அப்படி அது கொண்டுவரப்படுமானால் அவர்கள் அத்தனை பேரும் பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்

(அ) ராதாபுரம் தொகுதியில் வட்டவிளை கிராமத்தில் ஒரு பெண் கொல்லப்பட்டது தொடர்பாக காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்து.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில் விமலா என்ற ஒரு பெண்மணி கொல்லப்பட்டு, காவல் துறையினர் சரிவர நடவடிக்கை எடுக்காத ஒரு சூழ்நிலை நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் அந்த ஊரில் இருக்கக்கூடிய பெரிய தனக்காரர் ஒருவருடைய மகனைக் காதலித்ததாகவும், அந்தக் காதலை விரும்பாத அந்தப் பெரிய மனிதர் ஆட்களை வைத்து அடித்து, அரளிக் கொட்டையை அரைத்து வாயிலே ஊற்றி தூக்கிப் போட்டுவிட்டதாகவும் அவருடைய தாயார் பஞ்ச வர்ணத்தம்மாள் நேரில் இங்கே வந்து சொல்லிச் சென்று இருக்கிறார்கள். ஆகவே அதில் காவல் துறையினர் முறையாக உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று, அந்தத் தாயார் பஞ்சவர்ணத்தை மிரட்டி இனிமேல் வந்து எதுவும் சொல்லக் கூடாது என்றும் அனுப்பியதாகவும் சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆவன செய்து உரிய நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைத் தண்டிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் பாப்பா உமாநாத் அவர்கள் கூறிய இந்தத் தகவல் பற்றி விசாரித்து அறிந்ததில் வட்டவிளை கிராமம், ராதாபுரம் காவல் நிலையத்திலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தென்கிழக்கே உள்ள கிராமம் ஆகும். அந்த கிராமத்தில் சுப்பிரமணிய நாடார் மகள் விமலா என்ற

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 26

10–30 மணி

17 வயதுப் பெண் தன்னுடைய தாயான பஞ்சவர்ணம் என்பவரோடு வசித்துவருகிறாள். சுப்பிரமணிய நாடார் பனையேறும் தொழிலுக்காகப் பாண்டிச்சேரி சென்று விட்டார். விமலா ப்ளஸ்2 தேர்விலே தோல்வியடைந்ததால் வள்ளியூரிலுள்ள தனியார் டுட்டோரியல் காலேஜில் பயின்று வந்துள்ளார்.

விமலாவுக்கும் வட்டவிளை அருகிலே உள்ள உதயத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ராஜாத்தேவர் என்ற இசக்கித்தேவர் அவர்களுடைய மகன் வேம்புராஜா என்பவருக்கும் இடையே ஒன்றரை ஆண்டுக் காலமாகக் காதல்அரும்பி, மலர்ந்து இருக்கிறது. இவர்களுடைய இரகசியத் தொடர்பை அறிந்த ராஜாத்தேவர், விமலாவின் தாயான பஞ்சவர்ணத்திடம் விமலா—வேம்புராஜா உறவு நிறைவேறாது என்று தன் அதிருப்தியை வெளியிட்டிருக்கிறார்.

இருப்பினும் இரண்டு மாதங்களுக்கு முன்பாக, வேம்புராஜா பஞ்சவர்ணத்திடம் அவரது மகள் விமலாவைத் தனக்கு மணம் செய்து தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதற்கு பஞ்சவர்ணம், வேம்புராஜாவிடம், அவருடைய தந்தையின் சம்மதத்தைப் பெற்று வருமாறு சொல்லியிருக்கிறார்.

இதற்கிடையே தன்னுடைய காதல் கைக்கூடாது என்பதை அறிந்த விமலா 18—2—1990-ல் தன்னுடைய தாயாரிடம், குறும்பூர் பக்கத்தில் உள்ள அரங்கத்திவிளையில் உள்ள தன் அக்கா வீட்டுக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்றுள்ளார். 20-ஆம் தேதி காலை சுமார் 10 மணிக்கு உதயத்தூரிலுள்ள இசக்கியம்மன் கோயில் பக்கம் சுய நினைவு இல்லாமல் விமலா கிடப்பதை ஒரு துப்புரவுத் தொழிலாளி பார்த்து, பஞ்சவர்ணத்திடம் தகவல் கூறியிருக்கிறார்.

உடனே பஞ்சவர்ணம் தன்னுடைய மகளைப் பேருந்தில் ஏற்றி, ராதாபுரம் காவல்நிலையத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். விமலா ஆபத்தான நிலையில் இருந்ததால் காவலர்கள் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு விமலாவைச் சிகிச்சைக்குக் கொண்டு செல்லும்படி அறிவுரை கொடுத்து—ஆனால் மருத்துவமனையிலே விமலா இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

20 ஆம் தேதி மாலை 4 மணிக்கு விமலாவின் தாயார் பஞ்சவர்ணம் தந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ராதாபுரம் காவல் நிலையத்திலே வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதுவரையிலே அந்த விசாரணையையொட்டி வந்துள்ள தகவல், விமலா தன்னுடைய காதல் ஈடேறாது என்ற கவலையிலே அரளிக் கொட்டையை சாப்பிட்டு இறந்ததாகத் தெரிய வந்துள்ளது. ஆனால், அம்மையார் அவர்கள் கொலை செய்துவிட்டு அவர்கள் அரளி விதை சாப்பிட்டதாக ஒரு கதை ஜோடிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தக் காதல் கதையினுடைய கொடுமைகளையும் பயங்கர விளைவுகளையும் பார்க்கும்பொழுது பாரதியாருடைய பாட்டுத் தான் ஞாபகத்திற்கு வருகிறது.

'' நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்,

ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார் ;

பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றார்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க

மூடரெல்லாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுக்கின்றாரே ''

என்ற பாரதியாருடைய பாடல்தான் ஞாபகத்திற்கு வருகிறது. ஆனால் பாரதியாரைப் போற்றித் துதிக்கின்ற தமிழகத்தில், பாரதியார் சொன்ன அந்த வார்த்தைகள் என்ன காரணத்தாலோ எடுபடாமல் இதுபோன்ற காதல் கொலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. காதல் கொலையா, காதல் தற்கொலையா என்பதை அரசு காவல்துறை மூலமாகத் தொடர்ந்து ஆராயும் என்ற உறுதியை மாத்திரம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : திருமதி நல்லதம்பி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. குமரி அனந்தன் : திருமதி நல்லதம்பி அவர்களும் இதுபற்றிக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி அவர்களும் இது தொடர்பாகக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது பதிவில் இருக்கிறது. அவர்களுடைய பெயரும் பதிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் காதல் சோகச் சித்திரத்தில் ரமணி நல்லதம்பியினுடைய பெயரும் இணைக்கப்படுகிறது. (சிரிப்பு).

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெண்ணுக்கும் அந்தப் பையனுக்கும் விருப்பம் இருந்தது, அவர்களிடையே தொடர்பு இருந்ததெல்லாம் உண்மை. அவர்கள் இருமுறை வீட்டை விட்டுச் சென்று தனியாக அந்தப் பையனுடைய இல்லத்திற்குச் சென்று காவல் நிலையத்திலே இந்தப் பெண்ணின் தாயாரும் தகப்பனாரும் அந்தப் பையனின் தகப்பனாரும் புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. அந்தச் சம்பவம் நடந்த அன்றைக்கும் அந்தப் பெண் வந்து அந்த பஸ் நிலையத்திலே இறங்கியவுடன் அவன் அழைத்துச் சென்று அங்கே அவனுடைய பம்புசெட்டிலே அவர்கள் இரண்டு நாட்கள் தங்கி இருந்திருக்கிறார்கள். குளித்துவிட்டு, ஈரத் துணிகளை அவர்கள் அந்தப் பைப்பிலே வைத்திருந்ததற்கெல்லாம், சாட்சிகள் இருக்கின்றன. அந்தப் பையனுடைய தோட்டத்திற்கு அருகிலே தான்அந்த உடம்பு கிடந்திருக்கின்றது. அதைப் பலர் பார்த்திருக்கின்றார்கள். அப்படி நிறையக் கடிதங்களெல்லாம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தாயாரிடமும் அந்தக் கடிதங்கள் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் இருவரும் எழுதிக்கொண்ட கடிதங்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே 174 போட்டு தற்கொலை என்று முடிப்பது தவறு. இன்றைக்குச் சட்டத்திலே இப்படிப்பட்ட கொலைகள், பெண்களுக்கு இழைக்கப்படக் கூடாது, கொடுமைகள் வரக்கூடாது என்பதற்காக Setcion 306 Compelled to Commit Suicide என்ற செக்ஷனிலேயாவது போட வேண்டுமென்ற நிலை இருக்கின்றது. அதை வலியுறுத்தி, அந்த செக்ஷனிலாவது போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

10-35 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படி போலீசார் ஒரு தவறான முடிவிற்கு வேண்டுமென்று வந்திருப்பார்களானால், நிச்சயமாக மறு விசாரணை நடத்தி உண்மை மக்களுக்குத் தெளிவாக்கப்படும்.

(ஆ) இராஜபாளையம் வட்டம், வடக்கு மங்கநல்லூர் கிராமத்தில் சலவைத் தொழிலாளர்கள் குடியிருந்து தொழில் செய்யும் இடத்தில் சாராயத் தொழிற்சாலை கட்ட நடவடிக்கை எடுப்பதால் அம் மக்களுக்கு ஏற்படவுள்ள பாதிப்பு குறித்து.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இராஜபாளையம் தாலுக்கா, வடக்கு மங்கநல்லூர் கிராமத்தில் 400-க்கு மேற்பட்ட சலவைத் தொழிலாளர்கள் நீண்டகாலமாக குடும்பமாக தொழில் செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொழிலுக்கான 'டோபி கானா' மாதிரி அந்த இடத்